Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, HARUR

| | |
|---|---|
| Calendar<br>Misscellancous<br>Preliminary Register<br>Sessions | **Case No. CC 227/2018** |
| Deposition of **PW1** | Prosecution<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | **திரு.கிருஷ்ணன்** |
| Father's Name/Husband Name | : | **த/பெ. தீர்த்தகிரி** |
| Village | : | **தீர்த்தமலை** |
| Taluk | : | **அரூர்** |
| District | : | **தருமபுரி** |
| Caste | : | |
| Calling | : | **PW1** |
| Religion | : | **இந்து** |
| Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **16th** Day of **December 2021.**

**திரு.கிருஷ்ணன்**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இந்த சம்பவம் குறித்து யாரும் தகவல் அளிக்கவில்லை. வழக்கமான ரோந்து பணியின்போது சம்பவம் குறித்து கண்டறிந்தோம். சம்பவம் நடந்த இடம் அடர்ந்த காடு என்றால் சரிதான். காட்டில் ஒற்றையடிப்பாதைகள்**

உள்ளது. அந்த ஒற்றையடிப்பாதையில் ஒன்றன்பின் ஒன்றாகதான் செல்லமுடியும் என்றால் சரியல்ல. புதர்களை சுற்றி பல நபர்கள் ஒரே சமயத்தில் செல்லலாம். சம்பவத்தின்போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையில் சென்றோம். யார் யார் எந்த எந்த திசையில் சென்றார்கள் என்று நியாபகம் இல்லை. நான் கிழக்குபக்கம் நோக்கி சென்றுகொண்டிருந்தேன்.

சம்பவ அறிக்கையை அலுவலகத்தில் வைத்து நான் சொல்ல சொல்ல கணினியில் தயார் செய்தார்கள். சம்பவ அறிக்கை சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மகசரை மாதேஸ்வரன் வனவர் தயார் செய்தார். மகசரும் அலுவலகத்தில் வைத்துதான் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையில் மாதேஸ்வரன் வனவர் தயார் செய்தார். ஒப்புதல் வாக்குமூலம் சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றாலும் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

கட்டுகம்பிகளை எதிரி கழற்றி கொடுக்க நாங்கள் கைப்பற்றினோம். எதிரி கட்டு கம்பிகளை கழற்றி எங்களிடம் கொடுத்தார் என்று ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ளது. ஒப்புதல் வாக்குமூலம் வழக்கிற்காக நானாக தயார் செய்துகொண்ட ஆவணம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ட ஆவணங்கள் அனைத்தும் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Adobe

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.

நீதித்துறை நடுவர் அரூர்.